IRE/-OIw

# புவியியல் மற்றும் சுரங்கத்துறை

அனுப்புனர்
முனைவர் சிவ.சூரியன், பி.எச்.டி., இ.ஆ.ப.,
இயக்குனர்,
புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
கிண்டி, சென்னை –600 032

பெறுநர்
அரசு செயலர்,
தொழில் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை –600 009.

ந.க.எண்.4022/எம்.எம்.7/2005, நாள். 27.5.2005

பொருள் : ரிட் மனு எண்16801/2005 சென்னை உயர்நீதிமன்றம் பாரப்பட்டு கிராம மக்கள் முன்னேற்ற சங்கம் சார்பாக திரு.எஸ்.ராஜேந்திரன்– இந்தியன் ரேர் எர்த் நிறுவனத்திற்கு எதிராக ரிட் மனு தாக்கல் – விளக்கவுரை அனுப்புதல் சம்பந்தமாக

பார்வை : அரசு சிறப்பு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் கடிதம் எண்.டபிள்.யூ.பி.16801/2005 நாள் 18/05/2005

******

பார்வையில் கண்ட அரசு வழக்கறிஞர் கடிதத்தோடு சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்தியன் ரேர் எர்த் நிறுவனத்திற்கு எதிராக பாரப்பட்டு மக்கள் கிராம முன்னேற்ற சங்கம் தாக்கல் செய்த ரிட் அபிடவிட் நகலை அனுப்பி அதன்மீது எடுத்த நடவடிக்கைபற்றி ஒரு வார காலத்திற்குள் விளக்கஉரை அனுப்ப கேட்டுள்ளார்கள். மேலும் ,அக்கடிதத்தில் மேற்கண்ட அபிடவிட்டில் கடுமையான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளதால் அதில் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த விபரத்தை தெரியப்படுத்தவும் கேட்டுள்ளார்கள்.

மேற்கண்ட அபிடவிட்டில் மேற்படி சங்கத்தினர்

1) இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் சுரங்க குத்தகை நிபந்தனைகளை மீறி நில உரிமையாளர் சம்மதம் இன்றி சுரங்க பணி செய்து வருவதாக ஒரு குற்றச்சாட்டு கூறி உள்ளார்கள்.
2) உரிமம் இல்லாத இடங்களிலும் சுரங்க பணி செய்து வருவதாகவும் இதற்கு வசதியாக சுரங்க பகுதிகளில் எல்கை கற்கள் நட்டு பராமரிக்கவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு கூறி உள்ளார்கள்.
3) சில குறிப்பிட்ட புல எண்களை குறிப்பிட்டு உரிமம் இல்லாத சில புல எண்களில் மேற்கண்ட நிறுவனத்தினர் சுரங்க பணி செய்து வருவதாகவும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள் அரசு நிறுவனம் என நடவடிக்கையை எடுக்க மறுப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டு கூறி உள்ளார்கள்.
4) கடலோர மேலாண்மை விதிகளின்படியோ மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்ட விதிகளின்படியோ அனுமதி பெறாமல் சுரங்க பணி செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

5) இயற்கையாக உள்ள கடற்கரையின் மணல் மேடுகளை தாங்கள் ஏற்கெனவே குவாரி செய்து வைத்த இருப்பு என கூறி குவாரி செய்து கொண்டு செல்வதாக ஒரு குற்றச்சாட்டு கூறி உள்ளார்கள்.

இவற்றை தடுத்து நிறுத்த தடையாணை கேட்பதோடு நீதிமன்றத்தில் இருந்து ஒரு ஆணையர் நியமித்து தல பரிசீலனை செய்யவும் கேட்டுள்ளார்கள். எனவே இது மிக முக்கியமான பொது நல வழக்காகும். இரு நீதிபதிகள் விசாரிக்கும் வழக்கு.

ஏற்கனவே இந்தியன் ரேர் எர்த் நிறுவனத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு அதன் அடிப்படையிலும் இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் தாக்கல் செய்த ரிட் மனு எண்.4661/2003 – ன் அபிடவிட்டில் ஒப்புக் கொண்ட பொருள்களின் அடிப்படையிலும் சில குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பது கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அரசு கடித எண்.23164/எம்.எம்.டி.1/2003–1 நாள் 4/3/2004ன்படி இந்தியன் ரேர் எர்த் நிறுவனத்திடம் விளக்கம் கேட்கப்பட்டது. ஐ.ஆர்.இ. நிறுவனம் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் இவ்வலுவலக கடித எண்.381/எம்எம்7/2000, நாள். 01.04.2005ன்படி விரிவான அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அரசு மட்டத்தில் நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

தொடர்ந்து பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வந்ததால் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கார்னட்கனிம சுரங்க குத்தகை பகுதிகளையும் 100 சதவீத ஆய்வு செய்ய வேறு மாவட்ட அலுவலர்கள் அனுப்ப பட்டார்கள். அவர்கள் அறிக்கையின் அடிப்படையில் தவறு செய்த நிறுவனங்கள் மீது நடவடிக்கை தொடர இவ்வலுவலக கடித எண். 9061/எம்.எம்.7/03–1 நாள்.13/10/2004ன்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். அதன்படி கன்னியாகுமரி மாவட்டம் இந்தியன் ரேர் எர்த் நிறுவனத்தின் மீது கீழ்க்கண்ட குறைபாடுகள் உள்ளன.

1) அவர்களது 3 சுரங்க குத்தகை பகுதிகளிலும் எல்கை கற்கள் நட்டு பராமரிக்கப்படவில்லை.
2) அரசாணை 1085 மற்றும் அரசாணை 1114 ஆகியவற்றில் மேற்கண்ட அரசாணை நிபந்தனைகளை மீறி பட்டா நிலத்தில் நில உரிமையாளர் சம்மதம் இன்றி சுரங்க பணி நடைபெற்றது.
3) மேற்கண்ட சுரங்க பணி சாலை, பாலம் ஆகியவற்றிற்கு சேதம் விளைவித்ததாக புகார்கள் உள்ளன.
4) பாதுகாப்பற்ற முறையில் குவாரி செய்யும் கனாக மணல் குவித்து வைக்கப்பட்டுள்ளது.
5) பித் மவுத் ரிஜிஸ்டர் பராமரிக்கப்படவில்லை.
6) ஐபிம். –யிடம் இருந்து அங்கீகரிக்கப்பட்ட மைனிங் பிளான் (கார்னட் கனிமத்திற்கு) இன்றி சுரங்க பணி நடைபெறுவதால் இது விதி 22எ–ன் படி விதி மீறல் ஆகும். மேலும் அவற்றை ஒரே சுரங்கமாக இணைக்கவும் அரசு அனுமதி பெற்றதாக தெரியவில்லை.

7) மினரல் கர்சர்வேசுன் அன்ட் டெவலப்மெண்ட் விதி 12(2) மற்றும் 12(4) ஆகியவற்றின் படி ஐந்தாண்டுக்கு ஒரு முறை பெறப்பட வேண்டிய மைனிங் ஸ்கீம் அங்கீகாரம் பெறப்படவில்லை.

8) அவர்கள் 10,18,592 டன் 31.08.2004 அன்று இருப்பு உள்ளதாக தெரிவிக்கிறார்கள். உதவி இயக்குநர் கணக்குபடி 7,28,000 டன் மணல் இருப்பு உள்ளது.

மேற்கண்ட 8 தவறுகளுக்கும் நடவடிக்கை தொடா இயக்குநர் அலுவலக கடித என்.9061/எம்.எம்.7/03/1 நாள் 13-10-2004ன்படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்ட படி இவ்வலுவலக கடித என் 9061/எம்.எம்.7/03 நாள்.13.04.2005ன்படி ஆய்வறிக்கை நகல் போன்றவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐ.ஆர்.இ நிறுவனம் கனிமங்களை குவித்து வைக்க ஸ்டோரேஜ் யார்டு ஆக எந்த இடத்திற்கும் அரசின் அனுமதி பெறவில்லை. அவர்கள் சுமார் 10,18,592 டன் மணல் இருப்பு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். உதவி இயக்குநர் ஆய்வறிக்கையில் 1/4/2004 முதல் 31/8/2004 வரை 1,72,000 மெட்ரிக் டன்னுக்கு மட்டுமே கேட்பாஸ் 1 வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வந்ததால் இந்தியன் பீரோ ஆப் மைன்ஸ் ரீஜினல் கண்ட்ரோலரிடம் இவ்வலுவலக கடிதம் நாள் 16/11/2004 படி சில விபரங்கள் கேட்கப்பட்டது. அவர் அந்நிறுவனத்திற்கு கார்னட் கனிமத்திற்கு ரூல் 22ன்படி அங்கீகரிக்கப்பட்ட மைனிங் பிளான் எதுவும் வழங்கப்படவில்லை என்பதை தெரியப்படுத்தினர். மேலும் அந்நிறுவனம் சமர்ப்பித்த வருடாந்திர அறிக்கையின் படி முடிவு இருப்பு 2,213 டன் 637 கிலோ (2,214 டன்) மட்டுமே. அது போல் தொழிற்சாலையில் உள்ள இருப்பு 316 டன் மட்டுமே. எனவே அந்நிறுவனம் 31/8/2004 வரை பெற்ற கனிமங்கள் 2214 + 316 + 1,72,000 = 1,74,530 டன் மட்டுமே. ஆனால் அந்த நிறுவனத்தின் கடிதப்படி இருப்பு 10,18,592 டன். எனவே கணக்கில் வராத இருப்பு 8,44,062 டன் ஆகும். அதே போல் உதவி இயக்குநர் ஆய்வு படியான 7,28,000 டன்னை கணக்காக எடுத்தால் கணக்கில் வராத இருப்பு 5,53,470 டன் ஆகும்.

எனவே குறைந்த பட்ச அளவை எடுத்தாலும் ஐ.ஆர்.இ நிறுவனம் 5,53,470 டன் கணக்கில் காட்டாமல் குவாரி செய்து இருப்பு வைத்துள்ளது. இது எம்.எம்.டி.ஆர் சட்டம் மற்றும் விதிகளுக்கு முரணானதாகும். மேற்படி சட்டம் பிரிவு 21(5)ன்படி மேற்கண்ட இருப்பு அரசு கைப்பற்றவோ அல்லது அதற்கான விலைமதிப்பு மற்றும் ராயல்டியை வசூலிக்கவோ அதிகாரம் உண்டு. அவர்களது வருடாந்திர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள குறைந்த பட்ச விலையான ரூபாய் 1700 ஒரு டன் என வைத்தால் கனிம கிரையம் மட்டும் 94,08,99,000 ரூபாய் வரும். கார்னட்டிற்கு 3 சதவீதமும் இல்மனைட்டிற்கு 2 சதவீதமும் ராயல்டி மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது . குறைந்தபட்ச ராயல்டியான 2 சதவீதத்தை வைத்தால் 1,88,17,980 ரூபாய் ராயல்டி வரும். எனவே மொத்தம் ரூபாய் 95,97,16,980 அந்நிறுவனத்திடம் இருந்து வசூலிக்க வேண்டியது வரும்.

இதா நிபந்தனை மீறல்களை பொறுத்த வரையில் 60 தினங்கள் சட்டபூர்வ கால அவகாசம் கொடுத்து அறிவிப்பு அனுப்பி சரி செய்ய கேட்கலாம். தவறும் பட்சத்தில் மேல்நடவடிக்கை தொடரலாம்.

அரசு மட்டத்தில் ஏற்கனவே விதி மீறல்களுக்கு தனியாக அறிவிப்பு அனுப்பப்பட்டு விளக்கம் பெற்று பரிசீலனையில் உள்ளது. அதுபோல் அந்நிறுவனத்தின் மீது உள்ள தவறுகளுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டியதும் அவசியமாகும். சட்டவிரோத சுரங்கப்பணிக்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சி தலைவரிடம் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு தகுந்த மேல்நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கலாம்..

அது போல் பாரப்பட்டு மக்கள் முன்னேற்ற சங்க புகாருக்கும் உடனடியாக ஒரு குழு அமைத்து ஆய்வு செய்தது தவறு இருந்தால் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கலாம்.

மனுதாரர் ரிட் மனுவில் கூறியிருப்பது போல் ஐ.ஆர்.இ நிறுவனம் கடலோர மேலாண்மை விதிகளின் கீழ் அனுமதி பெற்றுள்ளதா என்ற விபரத்தை தெரியப்படுத்தவும் மேலும் இப்பகுதி மனுதாரர் கூறியிருப்பது போல் மணல் மேடுதானா? ஆம் என்றால் அது கடலோர மேலாண்மை விதிகளின் கீழ் தடை செய்யப்பட்டதுதானா என்ற விபரத்தை சுற்றுச்சூழல் துறை இயக்குநர் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க அவருக்கு அறிவுரை வழங்கலாம். இது பொது நல வழக்காக 2 நீதிபதிகள் முன்னிலையில் வருவதாலும் நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமிக்க மனுதாரர் கோரியிருப்பதாலும் இதில் [illegible]வில் ஆய்வறிக்கை சமர்ப்பிக்க அவருக்கு அறிவுரை வழங்கலாம்.

மேற்கண்ட விபரங்களை அரசு வழக்கறிருக்கு தெரியப்படுத்தி அரசு ஐ.ஆர்.இ. நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என மனுதாரர் கூறியிருப்பது உண்மையல்ல என்றும் ஆய்வறிக்கையின் அடிப்படையிலும் புகார் மனுக்களை விசாரித்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் மாவட்ட ஆட்சி தலைவாலும் அரசு மட்டத்திலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இந்த விபரங்களை நீதிமன்றத்தில் தெரியப்படுத்தி ரிட் மனுவை தள்ளுபடி செய்யலாம் என எதிர் உரை தாக்கல் செய்ய அரசு வழக்கறிஞரை கோரலாம்.

ஒ/ப. [signature] 27/5

இயக்குனர்

புவியியல் மற்றும் சுரங்கத்துறை

[signature] 27/5/05

[பெறு]கல்: திரு.டி. கிருஷ்ணகுமார்,
சிறப்பு அரசு வழக்குறைஞர்,
சென்னை உயர்நீதிமன்றம்,
சென்னை – 104/

[நகல்]கள்: மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியகுமரி.

[m]ydoc/4022MM705-cd